1973 மார்ச் 14]

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மனுக்கு வைரக் கிரீடமும், கவசமும் செய்யப்பட்டிருக்கிறது. அறங்காவலர்கள் வசூலித்து செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் வசூலிப்பதற்கு முன்னால், அரசாங்கத்திடம் அனுமதி பெற்றார்களா ? அல்லது அவர்களே குழுவை அமைத்து வசூலிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10·0

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன். : தலைவரவர்களே, மூன்று வகைகளில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த திருப்பணிக் குழுவினரும், அறங்காவலர் குழுவினரும், கோவிலுக்கு வருகின்ற பக்தர்கள் இந்தத் திருப்பணிக்காக வைக்கப்பட்ட உண்டியல் வசூலும் ஆக இந்த மூன்று வகையான வசூல்கள் செய்திருக்கிறார்கள். இந்த வசூல்கள் அரசாங்க அனுமதி பெற்று, தணிக்கைக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு செய்யப்பட்டுள்ளன.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மனுக்கு இது போல் வேறு கிரீடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அது பற்றி விவரம் எனக்குத் தெரியாது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, மதுரை மீனாட்சிக்கு வைரக் கிரீடமாக, வைர அட்டிகையாக, இன்னும் பல கோவில்களுடைய சாமிகளுக்கு இருக்கின்ற நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு கோடி இருக்கும். இதைப் பற்றி பொருளாதார நிபுணர்கள் குழு ஏதாவது அமைத்து அதன் கருத்து அறிய இந்த அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மீனாட்சிக்கு இருக்கின்ற சொத்தின் மதிப்பைச் சொன்னால் காமாட்சிக்குப் பொறாமை ஏற்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, கோவில்களில் இப்படிப்பட்ட விலை மதிப்புள்ள நகைகள் இருப்பதால், குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, இதைத் தவிர்க்க விலை மதிப்புள்ள நகைகள் செய்யாமல் இருக்கக்கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, விலை மதிப்புள்ள நகைகள் செய்யலாமா என்பது சமுதாய ரீதியில் எழுந்துள்ள பிரச்னை. பாதுகாப்பு ரீதியில் அப்படிப்பட்ட நகைகள் ஒழுங்காக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, நாஸ்திகர்களை அறங்காவலர்களாக நியமிப்பதால் ஆண்டவனுக்குக் கோபம் வந்து, தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாற்றப்பட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்களே, அது **உண்மையா ?**